**தலைப்பு 110 – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 110 – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 அக்தோபர் 23 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறைபாடுகள்.<br>2. பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணுவதால் குறைபாடுகள்<br>3. பதவியணி பயிற்சி வழங்களில் குறைபாடுகள். | 2.1.1<br>2.8<br>2.11(ஆ) |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | சேர்க்கப்பட்டிருந்த மிகை பதவியணிக்காக அங்கீகாரம் பெற்றிருக்காமை | 2.11(அ) |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற் கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 1. செயற்திட்டங்கள் செயற்படுத்தாமை | 2.1.2 |
| | | 2. நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்பார்த்த விதம் நிறைவேற்றாமை | 2.1.3 |
| | | 3. பெறுகை செயன்முறையில் குறைபாடுகள் | 2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்ற தெனவும் | விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள் | 2.3 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களை அணுகுதல் | 2.4 |
| | | 2. ஒதுக்கிய ஏற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.6(அ) |
| | | 3. மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.6(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோக த்தர்களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்கள் நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு இயலாமை | 2.7(அ) |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களி னால் கடைபிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.5 |

உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும் அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 17 செய்பணிகள் காணப்பட்டன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான கருமங்கள் நிறைவேற்றக்கூடிய விதமாக செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உள்ளவாறு நாளதுவரை ஆக்கப்பட்ட சபையின் அமைப்பு கூட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் சமர்பித்திருக்கவில்லை.

#### 2.1.2 செயற்திட்டங்கள் செயற்படுத்தாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டத்தினை நிலைநாட்டுதல் தொடர்பாக செயன்முறையினை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2017 ஆண்டின் போது ரூபா 15 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டின் உதவி வழங்குனர் ஒருவர் முன்வராத காரணத்தினால் குறிப்பிட்ட செயறய்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச கருமமொழிக் கொள்கை செயற்படுத்துவதற்காக 02 செலவு விடயங்களின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 600,000 ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த போதிலும், குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.3 நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்பார்த்தவாறு செயற்படுத்தாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிசார் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது 60 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 20 மில்லியனிற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 10 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் அவ் ஏற்பாடுகளில் ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டு 31 பயிற்சி வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) தற்போது காணப்படும் சட்ட முறைமையின் மறுசீரமைப்புகள் தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது 50 சட்ட அறிக்கைகள் மொழிபெயர்ப்பு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 34 சட்ட அறிக்கைகள் மாத்திரம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

## 2.2 பெறுகை செயன்முறை

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வழங்கல்கள் சேவைகள் நிறைவேற்றுக்கொள்வதற்காக பெறுகை செயன்முறையை கடைபிடிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1 இன் பிரகாரம் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக விரிவான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அமைச்சுக்குத் தேவையான டயர்கள் மற்றும் டியுப்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,804,950 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு இறுதி அளவில் அவற்றில் ரூபா 2,583,596 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான டயர்கள் மற்றும் டியுப்களை கொள்வனவு செய்வதற்காக மிகை மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது என கண்டிறியப்பட்டது. அதே போல் அந்த செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடுகள் மீதியாக இருந்த போதிலும், மீளாய்வாண்டு அக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 1,130,136 தொகை பெறுமதியான டயர்கள் மற்றும் டியுப்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் அந்த செலவுகளை மூலதன செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்திருந்தது.

(இ) அமைச்சினால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 1.66 மில்லியன் செலவிடப்பட்டு 10 வாயு சீராக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுகை அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேபோல் 04 வாயு சீராக்கிகளுக்கான சமர்பித்திருந்த குறைந்த விலை மனுவுக்கு பதிலாக கூடிய விலை மனு ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 106,232 தொகைக்கான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.12.3 இன் பிரகாரம் இயந்திரத்தை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரினால் அந்த இயந்திரம் உரிய நியமங்களுக்கு இணங்க உள்ளன என சான்றுபடுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) 2017 பெறுகை திட்டத்தின் பிரகாரம் நூலகப் பாதுகாப்பு முறையை ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 4 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. பெறுகை செயன்முறை மற்றும் விவரக் குறிப்பு பட்டியல்களில் காணப்பட்ட வழுக்கள் மற்றும் குறைபாடுகளின் காரணமாக கிடைத்திருந்த விலை மனுக்கள் மதிப்பாய்வு மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்ததால் மீளாய்வாண்டின் போது அந்த பெறுகையை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

2017 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு நீதி அமைச்சின் வாகன கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 13 வாகனங்கள் விளைவற்று அல்லது பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

## 2.4 கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இனக்கமின்றி 02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 9.52 மில்லியன் இற்கான ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட பின்னர் சேமிப்பு ரூபா 357,103 இனால் மிகையாக ரூபா 358,112 இற்கான பொறுப்புக்களுக்கு அனுகியிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அனுகியிருந்த ரூபா 222,187 இற்கான கட்டுபாடுகள், ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சொந்தமான 05 வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும், அந்த விபத்துக்கள் மூலம் ஏற்பட்டிருந்த நட்டங்களை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2016 மார்ச் 08 அமைச்சின் வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து ஒன்றின் மூலம் ரூபா 431,120 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்த சேதத்தை மீளளிப்பு செய்வதற்காக உரிய காப்புறுதி நிறுவனம் தாமதமாக விண்ணப்பித்திருந்த காரணத்தினால் அந்த நட்டஈட்டை வழங்குவதற்கு காப்புறுதி நிறுவனம் மறுத்துள்ளது. இந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் செயற்பட்டு நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரிடம் நட்டத்தினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் அமைச்சுக்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக அமைச்சினால் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2016 | மீண்டுவரும் | 841.48 | 746.63 | 94.85 | 11.27 |
| | மூலதன | 505.49 | 320.25 | 185.24 | 36.65 |
| | **மொத்தம்** | **1,346.97** | **1,066.88** | **280.09** | **20.79** |
| 2017 | மீண்டுவரும் | 836.57 | 792.93 | 43.64 | 5.22 |
| | மூலதன | 242.95 | 178.75 | 64.20 | 26.42 |
| | **மொத்தம்** | **1,079.52** | **971.68** | **107.84** | **9.99** |

மீளாய்வாண்டிற்காக ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்காமை**

04 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 04 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 14.9 மில்லியன் தொகைக்காக மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதனையும் பயன்படுத்தாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை ஏற்பாடுகளை ஒதுக்கியிருத்தல்**

15 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 11 மூலதன செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 68.5 மில்லியனிற்கான மிகை ஏற்பாடு செய்திருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த செலவு விடயங்களுக்கு உரிய பயன்படுத்தல் மேற்கொண்டிருந்த பின்னர் சேமிப்பு ஒதுக்கிய ஏற்பாடுகளில் 20 சதவீதம முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

### 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அமைச்சுக்குரிய விடய இலக்கம் 11001 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26.00 | 25.21 | 9.00 | 12.34 | 100.00 | 56.61 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த இணைக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 1.42 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை கடன் மீதி 01 வருடம் முதல் 25 வருடங்கள் வரை கால வீச்சில் இருந்து காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகள அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை அமைச்சுக்கு இயலாது இருந்தது.

**(அ) தனிப்பட்ட கடன் மீதிகள் பதிவேட்டில் குறைபாடுகள்**

மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 119,141 தொகைகள் வெள்ள இடர் கடன் தனிப்பட்ட அட்டவணையில் ஆதன கடனின் கீழ் காணப்பட்டிருந்தது.

## 2.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | விலைமனு அழைப்பு பதிவேடு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சேதங்கள் தொடர்பான பதிவேடுகள் | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பீட்டில் செய்பணிகளை உட்படுத்தியிருக்கவில்லை.

## 2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 ஜனவரி 28 திகதிய DMA/2009(1) (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 ஜூலை 09 திகதிய DMA/2009(1) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, குறைந்தளவு காலாண்டிற்கு ஒருமுறை வீதம் 04 தவணைகள் கூட்டங்களை நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது 02 கூட்டத்தவணைகள் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியணி உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 27 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 24 | 13 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 157 | 134 | 27 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 113 | 109 | 04 | - |
| (v) | அமைய/ ஒப்பந்த | - | 04 | - | 04 |
| (vi) | நீதியல்லாத உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிறுவனம் | 04 | 04 | - | - |
| | மொத்தம் | 346 | 302 | 54 | 10 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து 03 ஆட்களை கொண்ட பதவியணி ஒன்று சேர்க்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அதற்காக முறையான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உத்தியோத்தர்கள் 189 பேருக்கு குறைந்த அளவு 08 மணித்தியாளத்திற்கான பயிற்சியேனும் வழங்கியிருக்கவில்லை.